திராவிட இயக்கத்தின் கொள்கைச் சிங்கம் முரசொலி செல்வம் பிறந்த நாள் ; சில நினைவலைகள்!

முரசொலி

முரசொலி' வரலாற்றில் முத்தமிழறிஞர் கலைஞர், முரசொலி மாறன்

– ஆகியோருக்கு அடுத்து முரசொலி ஆசிரியராக இருந்தவர் முரசொலி செல்வம் அவர்கள்.

முரசொலி ஆசிரியராக இருந்து முரசொலி செல்வம் அவர்கள், தி.மு.கழக கொள்கைப் பிடிப்பை மக்களிடத்தில் ஓங்கச் செய்தார்!

முரசொலி செல்வம் அவர்களின் எழுத்துகள் தமிழ்நாட்டை, தமிழ் மக்களை, தமிழ்மொழியை மீட்டெடுக்கும் ஆயுதமாக அமைந்திருந்தன.

தனது கடைசி நாள் அன்றும் முரசொலி செல்வம் அவர்கள் எழுதிய பெட்டி, செய்தி வரலாற்றில் இடம் பெற்றிருக்கிறது. அவரது சிந்தனை, செயலாற்றல் முழுக்க முழுக்க தமிழ் நாட்டிற்கு, தமிழ் இனத்திற்கு, தமிழ்மொழிக்குப் பாதுகாப்பு அரணாகவும், இன விரோதிகளுக்குப் பூகம்பமாகவும் இருந்திருக்கிறது.

10.10.2024 அன்று அவர் நம்மைவிட்டு சென்றார் என்றால், 9.10.2024 அன்று இரவு முரசொலி ஆசிரியர் குழுவினருக்கு பெட்டிச் செய்தியை எழுதி அனுப்பி அதன் புருப்பை படித்து ஒப்புதல் அளித்த பின் தான் உறங்கச் சென்றார்.

அப்படி தன் எழுத்தில், கலைஞர் அவர்களைப் போல் 'சிறு பிழையும் வந்துவிடக்கூடாது' என்று கண்ணும் கருத்துமாக முரசொலியில் எழுதினார்.

தமிழ்நாட்டின் மீதும், தமிழ் மொழி மீதும், தி.மு.கழகத்தின் மீதும், முத்தமிழறிஞர் கலைஞர், தற்போதைய கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் மீதும் மிகுந்த பற்றும் பாசமும் கொண்ட முரசொலி செல்வம் அவர்களின் பிறந்த நாள் இன்று.!

முரசொலி செல்வம் அவர்களின் பிறந்த நாளான இன்றைய தினம் முத்தமிழறிஞர் கலைஞர், முரசொலி மாறன், முரசொலி செல்வம் ஆகியோரின் வளர்ப்பு, வழித் தோன்றலாகத் திகழ்பவர் நமது கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முரசொலி வளாகத்தில் ஏற்கனவே முத்தமிழறிஞர் கலைஞர் – முரசொலி மாறன் ஆகியோருக்கு சிலை அமைக்கப்பட்டுள்ள தனைத் தொடர்ந்து முரசொலியின் வளர்ச்சியில் பெரும் பங்கு கொண்ட முரசொலி செல்வம் அவர்களின் திருவுருவச் சிலை மட்டுமல்ல, முரசொலியில் ''சிலந்தி'' என்ற பெயரில் முரசொலி செல்வம் அவர்கள் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பும் நூலாக இன்றைய தினம் வெளியிடப்படவிருக்கிறது!

முரசொலி செல்வம் அவர்களின் திருவுருவச் சிலைத் திறப்பு – மற்றும் 'சிலந்தி' நூல் வெளியீட்டு நிகழ்ச்சியை கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னெடுத்து முரசொலி செல்வம் அவர்களின் புகழுக்கு மேலும் புகழ் சேர்த்திடும் வகையில் இந்நாள் அமைந்திருக்கிறது.

அதனையொட்டி இன்றைய தினம் முரசொலி செல்வம் அவர்களின் புகழை போற்றிடும் வகையில், முரசொலி செல்வம் அவர்களின் எழுத்துகளை நினைவுகூரும் வகையில் 'முரசொலி' சில நினைவலைகளை இங்கே தொகுத்தளித்துள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர், திருமதி தயாளு அம்மையார் ஆகியோருடன் முரசொலி செல்வம் – திருமதி செல்வி செல்வம்

தலைவா, உன் மைந்தன் உன் வழியில் தொடரோட்டத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்!

-முரசொலி செல்வம்

எண்ணற்ற தமிழ் நெஞ்சங்களின் இதய நாயகனே! விண்முட்டும் சாதனைகளைப் படைத்து. பண்பட்ட நவீன தமிழகத்தை உருவாக்கினாய். கண் நோக்கும் திசையெல்லாம் உன் எண்ணத்தில் உருவான தமிழகமே தெரிகிறது!

பேசினாய்: தமிழ் உயர்! எழுதினாய்: தமிழ் தழைக்க! சிந்தித்தாய்: தமிழ்நாடு வளமுற! உழைத்தாய்: உன்னதத் தமிழகம் உருவாக! தலைவா! நீ செதுக்கிய தமிழகம் இன்று உயர்ந்து நிற்கிறது! உயர்ந்து நிற்கிறது: அதனை மேலும் மேலும் உயர்த்திட ஒரு சமத்துவபுரம் கிறப்பு விழாவில் பேசும்போது. 'இந்தத் தமிழகமே சமத்துவபுரமாக விளங்க வேண்டும் என்று கனவு கண்டாயே: அந்தக் கனவை நனவாக்க உன் மைந்தன் உன் வழியில் தொடரோட்டத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்!

ஒரு நாளில் உள்ள 1440 நிமிடங்களில் அவர் ஓய்வெடுக்கும் நேரம் ஏது என்றும். அந்த ஓய்வும் எத்தனை நிமிடங்கள் இருக்கும் என்றும் எண்ணட்ட இயலா வகையில் எந்நேரமும் சுழன்று கொண்டிருக்கிறார்!

சமூக்கங்கள் உருவாக்கிய சனாதன தர்மத்தால் பிளவுண்டு கிடக்கும் தமிழ்த்தாயின் மக்கள், சாதி. மத பேதந் துறந்து ஒன்றுபட்டு ஒரு தாய் மக்களாய் வாழ வேண்டும் என்ற நோக்கத்தில் ஓயாது உழைத்தாய்! அந்த உன் இலட்சியத்தை நிறைவேற்றும் வகையில் திராவிட மாடல் ஆட்சி டேறுதடை போட்டுக் கொண்டிருக்கிறது.

நீ எண்ணி எண்ணி இறும்பூதெய்திடும் வகையில் உன் ஆட்சியின் தொடர்ச்சியாய் திராவிட இயக்கச் சுடரைச் சுமந்து ஓய்வின்றி ஓடிக்கொண்டிருக்கிறார் தளபதி!

மாநில உரிமைகளைப் பறிகொடுத்து விட்டு. மண்புழு போல வளைந்து ஊர்ந்து ஒன்றிய அரசிடம் மண்டியிட்டுக் கிடந்த 'மாண்புமிகு' (!) களை கடந்தசில காலங்களாகக் கண்டுகொண்டிருந்த தமிழகத்தில்.

'நாமாார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்'

என்று. தமிழ்நாட்டின் சுய மரியாதைக்கும் பங்கம் ஏற்படின் சிலிர்த்து சிங்கமெனக் குரல் கொடுத்த உன் வழியில் இன்று உரிமைக்குக் குரல் கொடுக்கும் உன் மைந்தனை தமிழ்நாடு மட்டுமின்றி. நாட்டின் பிற பகுதிகளும் உச்சிமோந்து கொண்டாடிக் கொண்டிருக்கின்றன.

"மதச்சார்பற்ற கொள்கை மழந்து போனால் குலைந்து போகும் தேசம்' எனக் கூறுவாய்!

மதவெறிக் கூட்டத்தால் தேசம் தொலைந்து போகமோ என்ற அச்சறிலை நாடெங்கும் இன்று உருவாக்கி கொண்டிருக்கிறது! மதவெறி நஞ்சை நாலா திக்குகளிலும் மத வெறிக்கூட்டம் கக்கிக் கொண்டிருக்கிறது! மதவெறிக் கூட்டத்தின் ஆதிக்கம் தமிழ்நாட்டில் வளர்ந்து விடாது தவிர்க்க ஒத்த கருத்துக் கொண்ட இயக்கங்களின் உதவியோடு அரண் அமைத்து. மத நல்லிணக்கத்தைத் தமிழ்நாட்டில் காத்து நிற்கிறார் உன் மகன்!

இறுக்காத புகழுக்குரியது தலைவா! –"இருந்துக்கள், கிரிதுவர். இஸ்லாமியர் சகோதரர்கள் பற்றுக்களாய் வாழும் தமிழகத்தில் ஏற்றுக்குள் புகுந்து வரும் சதிகாரக் கும்பல் பறவைப் பொற்றுக்கள் பாம்பாய் நுழையு இடமில்லை என ஏழுவோம்"

எனக் கவி யாத்தாய்! உன் உள்ளார்ந்த அந்த உணர்வை கவிதையாய் படைத்தாய்! அந்தக் கவிதை மெய்ப்பட அனைத்து மதத்தினரையும் அரவணைக்கும் உன் அரச. மீண்டும் தொடர்கிறது!

உன் வழியில் உழைக்கிறோம். அதனாலே ஒதிய மிலார் முருங்கைக் கொம்பு ஒடிபட்டு சிதறுதல் போல் பகை முறியட்டு பஞ்சாய்ப் போகும்! நீ தந்த விளக்கெடுத்து நடக்கின்றோம். கடுமையில் அணையாமல் காற்றுக்கு நடுங்காமல் கரம் பொத்திக் கைவிளக்கைக் காக்கின்றோம்" என அண்ணா பிறந்த நாள் கவிதை ஒன்றில் நீ பாடினீட். அன்னாளைவிடம் வரம் ஒன்று கேட்டாய்!

"அடித்தளத்து மக்களுக்கு அடுக்கடுக்காய் சாதனைகள் அன்னான் உன் வழியில் அயராமல் நடப்பதெல்லாம் கண்ணால் ஒருமுறை நீ பார்த்து விட்டால் எம் கவலையெல்லாம் பறந்து போகும். தண்ணாா முழுநிலவே தட்டாமல் நீ நந்துவிடு"

என தெய்டாக தேன் தமிழில் நீ வழத்த வாசகத்தையே அந்த வரத்தையே தளபதி சாரபில் கேட்கிறோம்.

தலைவா! உன் வழியில் தளராது தளபதி நாளுந் நடத்திடும் சாதனைகளை. கண்ணால் நீ பார்த்து மகிழ தண்ணாா முழுநிலவே தட்டாமல் நீ வந்துவிடு! இந்த வரம் நீ தந்தால் இறவா வரம் பெற்றதுபோல் இன்பத் தமிழகமே கூத்தாடும்!"

உன் காலடிகளுக்கு என் இதய நன்றி!

-முரசொலி செல்வம்

ஆண்டை இனத்தால் மீண்டும் முற்றுகை மாண்டிடும் புழுவே மதபம் கழற்று"

"காதலிலே கவிதையிலே களம் போகும் பேச்சு: கணவனுக்கும் மனைவிக்கும் தாயகமே மூச்சு!"

இந்த இலட்சிய வாசகங்களை இலச்சினையாகப் பதித்து வெளிவந்த ஏடு 'முரசொலி!'

ஏற்றுக்கொண்ட கொள்கைக்காக எதிர்கொண்ட அடக்குமுறைகள் அத்தனையையும் தாங்கி வளர்ந்த ஏடு!

இந்தி எதிர்ப்புப் போராட்டம். விலைவாசி எதிர்ப்புப் போர். அவசர காலம் அத்தனையிலும் முரசொலி வகித்த பங்கும் அதற்காக அது தாங்கிக் கொண்ட தழும்புகளும் பேராட்டம் பட்டியல் அடங்காது! எத்தனை எத்தனை முறை போலீஸ் படையெடுப்பு! சோதனையிடல்கள்! மிரட்டல்கள்!

அரசாங்கம் காட்டிய அத்தனை புச்சாண்டிகளுக்கும் பயப்படாது தனது பணியினைச் செய்துவரும் ஏடு முரசொலி!

முரசொலியின் ஆசிரியர் கலைஞர்!

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது முரசொலி எழுப்பிய அனலிலே துவண்டுபோன ஆட்சியாளர்கள் கனல் கக்கும் கலைஞரின் பேனாவை அவரை முடக்கி இந்திய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்தனர்! பாரைத்த தனிமைச் சிறையிலே பாம்புகளுக்கும். பல்லி களுக்குமிடையே அடைத்து மிரட்டினர்!

பாவம் ஆட்சியாளர்களுக்குத் தெரியாது! கலைஞரின் பாசறையில் கலைஞரால் தயாரிக்கப்பட்ட பலாசுடி முனைகள் முரசொலியில் படைக்கலன்களாக உள்ள னர் என்பது.?

கலைஞரை அடைத்து விட்டால் முரசொலி முடக்கப் பட்டுவிடும் எனக் கருதினர். கலைஞரி கைதுக்குப் பிறகும் 'முரசொலியின் வேகத்தை தடைப் படுத்த முடிய வில்லை!

உடனே அந்தப் பாதுகாப்புச் சட்டம் அன்றைய

துணை ஆசிரியர் முரசொலி மாறன் மீதும் பாய்ந்தது!

இவைகள் நடைபெற்ற காலம் சர்வ வல்லமை மிக்க காங்கிரஸ் ஆட்சி காலம்! அந்தக் கால மிரட்டல்களுக்கு அஞ்சாத ஏடு முரசொலி!

அடுத்து அவசர நிலைக் காலம்! முரசொலியில் எழுதப்படும் எழுத்துக் களுக்கு தணிக்கை! முரசொலியின் அன்றைய ஆசிரியர் முரசொலி மாறன் மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறைப்படுத்தப்படுகிறார்!

கலைஞரின் கருத்துக்கள் தணிக்கை விதிகளையும் தாண்டி வெளிவருகிறது முரசொலியில்!

'இம்' என்றால் சிறைவாசம் ' ஏன் என்றால் வனவாசம் என்றிருந்த காலகட்டத்திலேயே அடக்குமுறைகளைக் கண்டு அஞ்சாது பயணம் நடத்திய ஏடு முரசொலி!

இப்போது முரசொலிக்கு தமிழக சட்டமன்றத்திலே கூண்டு!

50க்கும் ஆண்டு பொன்விழாவைக் கண்ட ஏடு முதன்முதலாக சட்டமன்ற கூண்டையும் சந்திக்கப் போகிறது!

தமிழகத்தில் எத்தனையோ ஏடுகள்!

தந்திரப் போராட்ட காலத்தில் வெள்ளையனை எதிர்த்து வெளிவந்த 'சுதேசமித்திரன்'. 'இந்து' போன்ற ஏடுகள்!

காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் மீண்டும் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் எல்லாம் எத்தனையோ எதிர்க்கட்சி ஏடுகள் தங்கள் எதிர்ப்புகளை ஆளுங்கட்சிக்கு எதிராக வெளியிட்டுள்ளன.

சட்டமன்ற நடவடிக்கைகளைக் கடுமையாக விமர் சித்துள்ளன.

ஆனால் அந்த ஏடுகள் எதுவும் சட்டமன்றக் கூண் டைச் சந்திக்கவில்லை!

அந்தக் கூண்டையும் 'முரசொலி' சந்திக்கப் போகி றது! தமிழக வரலாற்றின் பல பக்கங்களில் இடம் பெற் றுள்ள முரசொலிக்கு மேலும் சில வரைவ வரிகள்!

தமிழக சட்டமன்ற வரலாற்றில் தயாரிக்கப்படும் முதல் கூண்டு!

அந்தக் கூண்டு முரசொலிக்காக!

அந்தக் கூண்டில் முரசொலி ஆசிரியனாக இருப்ப தால் நான்!

ஒரு சாமான்யன் மாபெரும் வரலாற்று வரிகளிலே இடம் பிடிக்கப் போகிறான்!

இந்த வாய்ப்பை எனக்கு ஏற்படுத்தித் தந்த என் ஆசான் கலைஞரின் காலடிகளுக்கு என் இதய நன்றி யைக் காணிக்கையாக்குகிறேன்!

(சட்டமன்றத்தில் கூண்டு குறித்து முரசொலி ஆசிரியர் செல்வம் அவர்கள் 20.9.92 அன்று முரசொலியில் எழுதிய பெட்டிச்செய்தி இது)

கூண்டு கண்டேன்; குதூகலம் கொண்டேன்!

—கலைஞர் கடிதம்

உடன் பிறப்பே,

"சிங்கத்தை நரியாக்கும் திறமில்லை யென்றாலும்

பொங்குற்றே சிங்கம் மழந்ததென்றால் நரிமனம் பூரிக்காதா?"

இப்படிப் புரட்சிக்கவிஞர் ஏக்கமுற்று இதயம் குமுறி கண்ணீர் சிந்தினார்.

தற்கை பெரியார் தவித்துப் போனார். கண்ணீர்க் கடலானார்.

அறிஞர் அண்ணா எழுத்திலே அவரது இதயத் திலிருந்து கசிந்த இரத்தக் கண்ணீரைக் கண்டோம்.

"கோமாளே! யாம் அழுகுபுது வஞ்சத் கண்ணீர் ஓமான் கடல் ஆயிரத்தை வெற்றி கொள்ளும்"

நானும் இரங்கல் கவிதை வரிகளைத் தீட்டினேன்.

இந்தியாவின் ஆலோசக ராக இங்கிலாந்து அரசின் வேண்டு கோளின்பேரில் இலண்டன் மாநகருக்குச் சென்ற சேளபால் எனும் விமானம் ஏரி. நீத்க கட்சியின் தன்னோ்கிலாந் தளபதி சர். ஏ.டி.பன்னீர்செல்வம் அவர்கள் பயணம் செய்ததோடு அவர் அமர்ந்திருந்த அந்த விமானம் ஓமான் கடலில் வீழ்ந்து. தமிழர்களின் செல்வத்தை-தீரரவிடர் களின் செல்வத்தை நம்மிடமி ருந்து செல்வம் அவர்களை பிரித்துத் தொலைத்தது.

1940 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முதல் நாள்தான் இந்தத் தாங்க முடியாத சோகம் தமிழ் மக்களை நிலை குலையச் செய்தது. காணமாற் போனதாகச் சொல்லப் பட்ட அனாபம் விமானம்: எங்கேயாவது ஒளிட்தில் கண்டுபிடிக்கப்பட்டு பன்னீர்செல்வம் பத்திரமாக உயிர் மோழுங்க்கிறார் எனச் செய்தி வரநதா என்று வானொலி விப் பெட்டிகள் இரக்குமிடங்களில் எல்லாம் செய்தியை எதிர்பார்த்து திரள்திரளாகக் காத்திருந்தவர் களில் நானும் ஒருவன்!

தமிழ்நாட்டுச் செல்வம் மட்டும் அல்லவே அவர். எங்கள் திருவாளருக்கு அடுத்த பெரும்பண்ணையாரில் பிறந்து வாழ்ந்த செல்வமும் ஆயிற்றே!

இலண்டன் பயணத்தை முன்னிட்டு அவருக்கு ஆரூரில் தேரர் விருந்தளித்து. அண்ணன் அழகிசாமி அவரைப்பாராட்டி வழிய னுப்பி வைத்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு களிப்புற்ற இளைஞர்களில் நானும் ஒருவனா யிற்றே!

1940 மார்ச்சில் பன்னீர்செல்வம் மறைந்த சோக நிழல் இந்த மண்ணில் படிந்திருக்கும் போது தான் அதே 1940 ஏப்ரல் திங்களில் என் சகோதரிக்கு ஒரு மகன் பிறந்தான். மறைந்தா லும்: மனத்தில் நிறைந்திருக்கும் பன்னீர் செல் வத்தின் நினைவாக அவனுக்கு நான் பன்னீர் செல்வம் என்று பெயரிட்டேன்.

அந்தப் பன்னீர்செல்வம்தான் கடந்த 21-ஆம் நாள் தட்டப்பேரவைக் கூண் டிலே நிறுத் தப்பட்ட முரசொலி ஆசிரியர் செல்வம்!

செல்வம் பிறந்தபோதே. என் தாயார் என்னைப் பார்த்து. உனக்கு ஒரு பெண் பிறந்தால் அதற்கு செல்வி பெயரிட்டு செல்வத்துக்கே துணைவியாக்க வேண்டு மென்று அன்புக் கட்டளை பிறப்பித்தார்கள். பாட்டியின் ஆசை நிறைவேறியது: ஆனால் அதை அந்த அன்புப் பாட்டியிருந்து பார்க்க வில்லை.

அண்ணா தலைமையில். தற்தை பெரியார். மூத றிஞர் ராஜாஜி. காயிதே மில்லத் ஆகியோர் ஒரே மேடையில் தோன்றி மணமாக்கலை வாழ்த்தினர்.

சட்டமன்றக் கூண்டில் முரசொலி ஆசிரியர் செல்வம்!
மறுக்க முடியாதே.

அந்த மணக்கோலத்தில் செல்வத்தை நான் பார்த்த போதுகூட எனக்கு எத்தனை மகிழ்ச்சியில்லை!

புதுக்கோட்டை. திருச்சி நிகழ்ச்சிகளை முடித்துவிட்டுத் திரும்பும் போது தாம்பரம் நயிலையில் வாங்கிப் படித்த ஆங்கிலம். தமிழ் நாளேடுகள் அத்த னையிலும் செல்வம் சட்டப் பேரவைக் கூண்டில் சிரிப்பு தவழ நின்று கொண்டிருக்கும் படம் வெள் வந்துள்ள தைப் பார்த்தபோதுதான் எனக்கு மகிழ்ச்சி தாங்க முடி யவில்லை.

வாடிய முகத்துடன் அந்தக் கூண்டுக்குள் செல்வம் நின்றிருந்தால்: என்னமக் வாடிப்போயிருக்கும்! அந்தச் செல்வத்தின் பெயரை இந்தச் செல்வத்துக்கு எத்து னையோ பொருத்தமாக அப்போதே வைத்தேன் என்று என்னையே நான் பாராட்டிக் கொண்டேன்: படத்தில்

தலைவர் கலைஞர் அவர்கள், முரசொலி ஆசிரியர் செல்வம் அவர்களை வழியனுப்பி வைத்த காட்சி!

செல்வத்தின் முகத்தில் அரும்பி நிற்கும் புன்முறுவல் கண்டு

படத்தை அரசாங்க செய்தித் துறையே எடுத்து. அந் தத் துறையே அல்லவா எல்லா ஏடுகளுக்கும் அனுப்பி வைத்திருக்கிறது!

இது. மேலும் பூரிப்பு வழங்கும் தகவல் அல்லவா!

உடன்பிறப்பே. அந்தப் படத்தை உற்றுப் பார்த் தேன்.

செல்வம் நிற்கும் கூண்டுக்கு அருகே அறிஞர் அண்ணா வின் படம். நான் முதல்வராக இருந்தபோது பிரதமர் அன்னை இந்திரா காந்தியை அழைத்து திறந்து வைக்கப்பட்ட படம்.

கடமை. கண்ணியம். கட்டுபாடு என்ற எழுத்துக்கள் ஒளி வீடுகின்றன பார்த்தாயா!

உச்சநீதிமன்ற ஆணையை மதிக்கமாட டேன் என்று ஆரவாரம் செய்யமாமல்: உச்ச நீதி மன்றத் தீர்ப்பை ஏற்று செல்வம். அந்தக் கூண் டுக்குள் நிற்கும்போது: கடமை. கண்ணியம். கட்டுபாடு எனும் அண்ணாவின் மொழிகள் செல்வத்தின் செயலைப் பாராட்டுவது போலவே அமைந்து ஒளிவீடுகின்றன அல்லவா?

அண்ணா. செல்வத்தை - மிகச் செல்மாக "செல்வா" என்றுதான் அன்பொழுக அழைத்து முரசொலிக்குத் தேவையான அறிவுரைகளைச் சொல்லுவார்.

அடையாறு மருத்துவமனையில் அண்ணா வுக்கு இறுதியாக ஏர் அறுவை சிகிச்சை அவசி யம் தேவை என முடிவு செய்யப்பட்டபோதுகூட : அண்ணா அவர் கள் அந்த உடல் நலிவுடனும் "செல்வா எங்கே" என அழைத்து. செல்வம் அவர் அருகில் சென்றதும் "செல்வா! வீட்டில் உள்ள பிள் ளைகளை அழைத்து வா! நான் பார்க்க வேண்டும்" என்று கூறியதை எப்படி மறக்க முடியும்.

அந்தப் பாசமுள்ள பெருந்தலைவனின் படத்தருகே கூண்டு! அதிலே செல்வம்! மன்றத்தில் ஜனநாயகம் போற்றிய பல தலைவர்களின் படங்கள்!

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப்பார் இலானும் கெடும்"

எனக் குறள் கூறிய வள்ளுவரின் படமும் கூட!

செல்வத்தை இன்று ஆசிரியராகப் பெற்றுள்ள முர சொலிக்கு வயது ஐம்பது!

இந்த முரசொலி 1942 இல் தொடங்கப் பெற்று 1943 இல் முதல் ஆண்டுவிழா கொண்டாடிய போது வருகை தந்து வாழ்த்திய வர்கள் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும் பேராசிரியர் அன் பழகனார் அவர்களும்!

இன்று அந்த முரசொலியைக் கூண்டி லேற்றியது சரியெனாது வாதாடுகிறார்: பேரவை யில் நாவலர் நெடுஞ்செழியன்!

இது பத்திரிகை சுதந்திரத்தைப் பறிக்கும் பழி வாங்கும் செயல் என்று கண்டித்துக் கறுப்புச் சட்டை அணிந்து திருச்சி வீதியிலே மனிதச் சங் கிலி அறப்போருக்குத் தலைமையேற்று கொளுத்தும் வெயிலில் நிற்கிறார் பேராசிரியர்!

என்னே அரசியலின் விசித்திரம்!

"எல்லோரையும் தாங்கிட ஒரு தாயின் வயிறு போதாத காரணத்தாலதனித்தனித் தாய் மார்களின் வயிற்றில் பிறந்த சகோதரர்கள் நாம்"

எனப் பெருமையுடன் கூறிப் பெருமிதம் கொண்ட அண்ணா அவர்கள், இன்றிலல்லாதது அவர் வரையில் அவருக்குக் கிடைத்த பேறுதானே!

இல்லையா உடன்பிறப்பே! எப்படியோ கூண்டு கண்டேன்: நான் குதூகலம் கொண்டேன்!

அன்புள்ள
மு.க
(முரசொலி 23.9.92)

கலைஞர் கூர் தீட்டி உருவாக்கிய ஆயுதம் - அண்ணன் முரசொலி மாறன்!

ஆசிரியர் கலைஞரை பாளையங் கோட்டைச் சிறையில் அடைத்து விட்ட தால் 'முரசொலி'யில் சுணக்கம் ஏற்படும் என ஆளுவோர் எண்ணினார்! ஆனால் முரசொலி வீறுகொண்டு எழுந்தது! 'மிதித்து விட்டால் புழுகூட புலி ஆகும்' என்பர். புலி என்ன ஆகும் எனப் புரியாத கூட்டம் 'முரசொலி'யைத் தொடர்ந்து இடறியது! கொதித்தெழுந்தது 'முரசொலி'! கலைஞர் கூர்தீட்டி உருவாக்கிய ஆயுத மான அண்ணன் மாறன், ஆசிரியர் கலைஞர் சிறை பிடிக்கப்பட்ட நிலையில் தற்காலிக ஆசிரியர் பொறுப்பை ஏற்றார்! புதிய எழுச்சி எழுத்துப் பிரவாகமாகக் கரை புரண்டது! மிரண்ட ஆட்சியாளர் அண்ணன் மாறனையும் பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்தனர்! கலைஞர் பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டுத் தனிமைச் சிறையில் வைக்கப்பட்டு ஒரு மாதம் சென்றபின். அதாவது மார்ச் 24 (1965) அன்று மாறன் கைது செய்யப் படுகிறார்.

அப்போது கலைஞரின் சினிமா தயாரிப்பு நிறுவனமாக விளங்கிய மேகலா பிக்சர்ஸ் நிறு வனத்தில் முரசொலி மாறனும் ஒரு பங்குதாரராக இருந்ததால் அவர் முரசொலியில் துணை ஆசிரியர் பொறுப்போடு. படத் தயாரிப்பு நிறுவனமான மேகலா பிக்சர்ஸ் அலுவ லகத்துக்கும் சென்று அந்தப் பணிகளையும் கவனிப்பார். அந்தப் பட நிறுவனத்தின் அலு வலகம் சென்னை 'உஸ்மான் சாலை'யில் இருந்தது. அங்குச் சென்றிருந்தார் மாறன்.

அவர் மேகலா பிக்சர்ஸ் அலுவலகத்தில் இருந்தபோது. அங்குச் சென்ற போலீசார். முரசொலி மாறன் அவர்களிடம். "முரசொலி அலுவலகத்தில் சில பதிவேடுகளைப் பார்க்க வேண்டும் வருகிறீர்களா?" எனக் கேட்டுள்ளனர். அதற்கு ஒப்புதல் அளித்து அவர்களு டன் வரச் சம்மதித்து. தனது காரில் ஏறிட அலுவலகத்தின் வெளியே வந்தார். அப்போது போலீஸ் இன்ஸ்பெக்டர் 'இல்லை... நீங்கள் போலீஸ் வேனில் ஏறுங்கள்' என்று கூற. கைது செய்கிறோம் வேனில் வருகிறேன். இல்லை எனில் என் காரிலேயே வருகி றேன்' என்றார்.

பின்னர் அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவித்து போலீஸ் வேனில் ஏற்றினர். முரசொலி மாறனை 'முரசொலி' அலுவலகத் துக்கு அழைத்து வந்த போலீசார். சில குறிப்பிட்ட தேதியுள்ள 'முரசொலி' இதழ்களையும். கார்ட்டூன்களையும் கேட்டீட அவர்க ளுக்கு அவைகள் தரப்பட்டன. அத்தோடு நிற்காது. ஆசிரியர் கலைஞர் அவரது கைதைத் தொடர்ந்து உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த 'அபிடவிட்டில் சில கார்ட்டூன்கள் குறித்து அவர் தெரிவித்திருந்த விபரத்தை ஓட்டீ போலீசாரே 'முரசொலி' அலுவலகத்தில் புகுந்து பழைய 'முரசொலி' பத்திரிகைகள். சில 'கார்ட்டூன்'களின் பிளாக்குகளைத் தேடிப் பார்த்தனர்! முரசொலி மாறன் கைதான செய்தி வெளியே பரவி கேள்வியுற்ற கழகத் தோழர்கள் அலுவலகம் முன் குவியத் தொடங்கினர். அதைக் கண்ட போலீசார் 'முர சொலி' யில் நடத்திய தேடுதல் வேட்டையை முடித்துக் கொண்டு. மாறன் அவர்களை போலீஸ் வேனில் ஏற்றிக் கொண்டு சென்று விட்டனர்.

- முரசொலி செல்வம்

தமிழ்நாட்டின் அரை நூற்றாண்டு கால சரித்திரம்!

முரசொலி செல்வம் என் உயிர் னையா நண்பர். எங்கள் நடப்க்கு வயது அறுபதுக்கு மேல். இந்த நீண்ட நெடிய வரலாற்றில் பிணக்கு. மோதல். ஊடல். உறுமல். இவைகள் எதுவுமே தலைகாட்டியது இல்லை.

தலைவர் கலைஞரோடும் கோபாலபுரத் தோடும் என்னை பிரிக்க முடியாத அளவிற்கு 'பெவிக்கால்' போட்டுஒட்டி விட்டோடு முரசொலி செல்வம்தான்.

கல்லூரி வாழ்க்கை தொடங்கி. இன்று வரை யான் படும் பேறுக்கெல்லாம் செல் வமே முழுமுதற் காரணகர்த்தா என்பதை என் நெஞ்சு அறியும். எங்களை நெருங்கியவ ர்கள் அறிவார்கள்.

முரசொலி செல்வத்திற்கு வீட்டோர் இட பெயர் பன்னீர் செல்வம். ஆனால். கல்லூரி வாழ்க்கையிலும் நண்பர்கள் வட்டத்திலும். ஏன்? வீட்டிலும் இவர் "செல்வம்" என்றே அழைக்கப்பட்டார்.

முரசொலி அலுவலகத்திற்குள் நுழைந்துவிட்ட. முரசொலி கவனப்படாதக தொடங்கி. ஆசிரியராக உயர்கின்ற வரை இவர் பெயரோடு. 'முரசொலி' என்ற பெயரும் ஐக்கியமாகிவிட்டது. 'செல்வத்தை' நேரில் பார்க்காதவர்கள் பல பேர்கள் உண்டு. ஆனால். 'முரசொலி செல்வம்' என்ற பெயரை

ஜெயிக்காதவர்கள் தமிழ்நாட்டிலேயே இருக்க முடியாது.

முரசொலி செல்வத்திடம் சில அரிய. பெரிய குணங்கள் உண்டு. விளம்பரத்திற்கு அலைவது. வீண் பெருமை பேசுவது. அவசி யமற்று உதவிகள் கேட்பது இவைகளெல்லா மாம் செல்வத்தின் அகராதியில் எந்தப் பக்கத் தைப் புரட்டினாலும். காணப்படாத உயர் குணங்கள்.

நட்புக்கு நியாயத்திற்கு. அவர் ஆரவார மின்றிச் செய்கின்ற உதவிகள் கணக்கில் அடங்காது.

செல்வத்திற்கு எப்பொழுதும் எடுத்தெறிந்து பேசத் தெரியாது. ஆனால். அறவே. பிடிக்கா தவனிடம்கூட அரைமணி நேரம் சிரித்தே பேசுவார்.

தமிழ்நாட்டு பத்திரிகை உலகில். இவரை அறியாதவர்கள் யாரும் கிடையாது. ஏட்டுத்து செல்வம் எழுதும் ஒவ்வொரு எழுத்தி னும் உயிர் துடிப்பு இருக்கும். கொள்கைகளை விளக்கும்போதும் கோபாளர்களுக்கு பதில் எழுதும்போதும் செல்வத்தின் எழுத்தில் உள்ள வேகத்தை கழகத்தவர்கள் படிப்பார் கள் மகிழ்வார்கள். எதிரிகளும் படிப்பார்கள். ஆனால். மலைப்பாய்கள்!

இனம் வயது முதற்கொண்டே... நாட்டுநடப் புகளை கவனித்து வந்த அனுபவம். முர சொலி அலுவலகம் வந்த பின் ஏடுகளை எல் லாம்படிக்கின்ற பழக்கம். செய்திகளை எப்படி பத்திரிகையில் நடைபெற்றோடு கொண்டுபோற்று அறிவாற்றல் இந்நூலில் குறிப்பிப்பட்டுள்ள நிகழ்வுகள் நடைபெற்றோடு உடனிருந்து பார்த்த நினைவுகள் எல்லாம் இவைகளின் வெளியாடுகள்தான் செல்